Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 18

யாழ்ப்பாணம் மாசி 16 ... 12 திங்கட்கிழமை 28-2-72

நவநாகரிக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவலலர்ஸ்
போன் 444
தந்தி 'இரத்தினமஸ்'
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# வடக்கில் பல கைத்தொழில் பேட்டைகள் நிறுவ நிதியுதவி

புதிய அரசியல் திட்டம்

## 'காங்கிரஸ் மாநாட்டில்தான் முடிவு எடுக்க வேண்டும்'

### வட்டு. எம். பி. கூறுகிறார்

குருநகர், ஞாயிறு

புதிய அரசியல் அமைப்பை தமிழ் காங்கிரஸ் ஆதரிப்பதா? இல்லையா என்பதற்கான முடிவை தமிழ் காங்கிரஸ் மகாநாட்டில் தான் எடுக்கவேண்டும் என வட்டுக்கோட்டை எம். பி. ஏ. தியாகராசா நமது நிருபரிடம் தெரிவித்தார்.

திரு. தியாகராசா மேலும் கூறியதாவது தமிழ் காங்கிரஸ் மகாநாட்டில் எடுக்கப்படும் முடிவு தான் மக்களின் முடிவாக இருக்கும் தேர்தல் முடிந்து இதுவரை தமிழ் காங்கிரஸ் இன்னமும் சட்டரீதியாக மகாநாடு கூட்டி இயலவில்லை.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் பொதுச்சபையின் முடிவின்றி ஒரு தனிநபர் கோரிக்கையை நாம் ஏற்க முடியாத நிலையில் இருக்கின்றோம். தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளரின் கருத்து தமிழ்க்காங்கிரசின் கருத்தாக ஏற்க முடியாது புதிய அரசியல் சாசனத்தை தமிழ்க்காங்கிரஸ் ஆதரிப்பதா இல்லையா என்ற பிரச்னை தனிப்பட்ட ஒருவரது கருத்தாக இருக்கக் கூடாது இது விடயத்தில் தமிழ்க்காங்கிரஸ் மகாநாடு கூட்டப்படவில்லை, மகாநாட்டில் பொதுமக்களின் கருத்தைத் தான் நாம் அறிய வேண்டும்.

தமிழ்க்காங்கிரஸ் புதிய அரசியல் அமைப்பை ஏற்கவில்லை என்று கட்சியின் பொதுச் செயலாளர் கூறுவது அவரது தனிப்பட்ட கருத்தாகவே நாங்கள் கருதுகின்றோம்

## லஞ்சம் வாங்குபவர்க்கு வருகிறது கடும் தண்டனை

கொழும்பு, ஞாயிறு

லஞ்சம் வாங்கினால் சொத்துக்களை பறிமுதல் செய்து சிறைக்கு அனுப்பும் கடுமையான தண்டனையை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முப்படையைச் சேர்ந்தவர்களும், காவல் எல்லைப் பகுதியைச் சேர்ந்தவர்களும் லஞ்சம் வாங்கியதாக நிரூபிக்கப் பட்டால் அவர்களுடைய சொத்துப்பறிமுதலுடன், சிறைக்கும் அனுப்பப்படுவார்கள். இப்படியான தண்டனை கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலாகா விசாரணையையும், லஞ்ச விசாரணைக் கமிஷன் விசாரணையையும் அடுத்து இப்போது குற்றவாளியாகக் காணும் பட்சத்தில் வேலையிலிருந்து மட்டும் நீக்கப்படுவார்கள்.

## யாழ். நகரில் மக்கள் வங்கித் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியில் பல கைத்தொழில் பேட்டைகளை நிறுவக் கூடிய வசதிகள் இருக்கின்றன. வல்லிபுரப்பகுதியில் ஒரு கண்ணாடி உற்பத்தி தொழிற்சாலையை நிறுவக்கூடிய அளவு மணல் இருக்கின்றது. இப்பகுதியில் உள்ள சங்கங்கள் சேர்ந்து ஒரு தொழிற்சாலையை கட்ட முன்வரலாம். இதற்கான உதவிகளை செய்ய எமது வங்கிகள் ஒத்துழைப்பு கொடுக்கும்.

மக்கள் வங்கி பொது முகாமையாளர் திரு டி. டபிள்யு. கன்னங்கரா நேற்று சனி யாழ் மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சமாசத்துடன் இணைந்த கிராமிய வங்கிகளை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

யாழ் மேயரும் யாழ் மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சமாசத் தலைவருமான திரு அல்பிரட் துரையப்பா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு கன்னங்கரா மேலும் கூறியதாவது,

கூட்டுறவு வங்கிகள் பொதுமக்களுக்கு ஆற்றி வந்த சேவைகளை தொடர்ந்து ... மக்கள் வங்கி இயங்கி வருகின்றது நாட்டில் இயங்கிவரும் 4000 பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கிராம வங்கிகளை நிறுவுவதற்கு மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்து வருகின்றது இதன் முன்னோடியாக இதுவரை 95 கிராம வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன நாட்டில் உள்ள பல நோக்குக்கூட்டுறவு அபிவிருத்திக்கும் சிறுகைத் தொழில் முன்னேற்றங்களுக்கும் இந்த வங்கிகள் கடனுதவிகளைச் செய்யும்.

இந்த கிராம வங்கிகள் ஒவ்வொரு சங்கங்களின் பிரதான அம்சமாக இருக்கின்றன. கூட்டுறவுச்சங்க உறுப்பினர்கள் தங்கள் பொருளாதார முன்னேற்றத்தை அடைய இந்த வங்கிகள் உதவிபுரிகின்றன. இந்த வங்கியின் உறுப்பினர்களுக்கு தேவையான அளவு மூலதனம் கொடுத்துதவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது திறக்கப்பட்டுள்ள கிராமிய வங்கிகளுக்கு 90 லட்சம் ரூபாவை மக்கள் வங்கி மூலதனமாக கொடுத்திருக்கின்றது. இதுவரை 1 கோடி 80 லட்சம் ரூபா இந்த வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ளன.

வடபகுதியில் இந்த வங்கிகளை நிறுவுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன் ஏனெனில் வடபகுதி மக்கள் கூட்டுறவுத்துறையில் நல்ல முன்னேற்றத்தை அடையும் நிலைக்கு வந்துள்ளனர். இவர்களுக்கு சேமிப்பு முறையிலும் நல்ல ஊக்கமும் ஆர்வமும் இருப்பதைக் காண்கின்றோம் எனவே இந்த வங்கிகள் முதலாளிகளுக்கு திறக்கப்பட்டுள்ளதாக கருதிவிடக் கூடாது சாதாரணமான பாமரமக்களுக்கும் விவசாயிகளுக்கும் சிறு கைத்தொழில்களை நடத்துபவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் தான் இந்தச் சந்தர்ப்பம் வேலை இருக்கின்றது. தங்கள் உடமைகளை கூடிய வட்டிக்கு அடைவுவைத்து அல்லலபடும் ஏழைமக்களுக்கு இந்த வங்கிகள் பூரண

(6-ம் பக்கம் பார்க்க)

## பொலிசாரால் வழக்கறிஞர் தாக்கப்பட்டார்

பருத்தித்துறை, ஞாயிறு

சந்தை நகரக் சிலரைப் பொலிஸ் நிலயத்திலிருந்து பிணை எடுக்கச் சென்ற வழக்கறிஞர் ஒருவர் தாக்கப்பட்டதாக பருத்தித்துறை வழக்கறிஞர் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஊட

5 ம் பக்கம் பார்க்க

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கூட்டறிக்கை

# சமாதான சகவாழ்வுக் கொள்கையை பின்பற்ற சீனாவும் அமெரிக்காவும் உறுதி

பீகிங், பெப். 27

சமாதான சகவாழ்வுக் கொள்கையைப் பின்பற்றுவதென்று சீனாவும் அமெரிக்காவும் இன்று வெளியான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கூட்டறிக்கையொன்றில் வலியுறுத்தியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ரிச்சர்ட் நிக்ஸன் கடந்த ஒரு வாரம் சீனத் தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தை இறுதியில் இன்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ரிச்சர்ட் நிக்ஸன் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாயும் கூட்டறிக்கையை வெளியிட்டனர். ஷங்காய் மேலும் யில் வைத்து இந்த கூட்டறிக்கையை வெளியிட்டனர்.

உறவுகளை மாமூல் நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அமெரிக்காவும் சீனாவும் உறுதி பூண்டுள்ளன.

இரு நாடுகளுக்குமிடையிலுள்ள தொடர்புகளை இருக்கமாக்குவதென்றும், காலத்துக்குக் காலம் அமெரிக்காவிலிருந்து பீக்கிங்குக்கு பிரதிநிதிகள் செல்வதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்குமிடையிலான சமூக முறைகளில் பல வேறுபாடுகள் இருந்தபோதிலும் இருநாடுகளுக்குமிடையிலான தன்னாதிக்கம், பிரதேச உரிமை ஆகியவற்றில் மதிப்புக்கொடுத்து நடப்பதென்றும் இருநாடுகளுக்குமிடையிலான கூட்டறிக்கை தெரிவிக்கிறது.

ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது

[5-ம் பக்கம் பார்க்க]

29 FEB 72 UNDERGRADUATE LIBRARY

## நியூ கல்லிங்கன்
இன்றுமுதல்
தினசரி 6-30, இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
நடித்த
**கண்ணன் என் காதலன்**

மாலை 4-15க்கு
AGENT X2
OPERATION UNDER WATER
(Spy Film)

## யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-விஜயா
**அக்கா தங்கை**

## பவானி
மூளாய்
தினசரி 6-15 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-பத்மினி
நடித்த
**தில்லானா மோகனாம்பாள்**

REGAL (Jaffna)
Daily 10-30 a. m. 5-15
7-15, & 9-45 p. m.
KILL THEM ALL AND COME BACK ALONE

தினசரி பி. ப. 2-00 மட்டும்
சிவாஜி-பத்மினி
ராகினி நடித்த
**நான் வணங்கும் தெய்வம்**

## மனோகரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 10-00
சனி, ஞாயிறு 10-30
கிருஷ்ணா — பாரதி
ஜெயலலிதா — ஜோதிலக்ஷ்மி
நடித்த
**சிங்காரிகளுடன் ஸி. ஐ. டி.**
[தமிழ்]
இசை: வேதா. மகாதேவன்

## ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
**சவாலே சமாளி**

கடைசி வாரம்
## ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். இரு வேடங்களில்
ஜெயலலிதா-அசோகன்
நடித்த
**நீரும் நெருப்பும்**
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

## வெலிங்டன் (யாழ்ப்பாணம்) லிடோ
திரைகளில்
தினசரி 2-30, 6-30, 10-00
சனி, ஞாயிறு காலை 10-30
தினசரி மாலை 10-00
2-00, மாலை 6-00
மற்றும்
இரவு 9-30
கெப்பிட்டல் - பிளாஸா -
திரைகளில்
சரித்திர நாயகனின் சாதனைச் சித்திரம்!
புரட்சி நடிகரின் வெற்றிச் சித்திரம்!!
புதுமைகள் பல அடங்கிய பொற்பேழை!!!



எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சீனிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் ஈஸ்ட்மென் வர்ணச்சித்திரம்
**ரிக்ஷாக்காரன்**
இசை: எம். எஸ். விஸ்வநாதன் டைரக்ஷன்: எம். கிருஷ்ணன், தயாரிப்பு ஆர். எம். வீரப்பன்

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டு வேலைகள், சக்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) எஞ்ஜின் வரிசையின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3977

### வைத்தியம்
சுவைத்திய ஆலோசனை இலவசம், அரைச்சலார் ரூபா 150/- திறமான பதக்கங்கள் கட்டலாம். வலிப்பினை கழட்டலாம். சிங்கப்பூர் பல்கட்டுமிடம், A. S. சங்கரப்பிள்ளை மடம், மேல் மாடி, பெரிய கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். நாட்டு

### கல்வி
J. S. C. மாணவர்களுக்கான (1) புதிய கணக்குப் போதுவிஞ்ஞான ... பிற்பகல் தொடக்கம் மாலை ... வரை. இறவுண் ... நிலையம், 16, கண்டி வீதி, கண்டிக்குழி, யாழ்ப்பாணம். 4079

விசேட, சிங்கள, ஆங்கில வகுப்புக்கள். மாலை 4 மணி தொடக்கம் 8 மணிவரை கட்டணம் மாதம் ரூ. 15-00 இறவுண் யோதலு நிலையம், 16, கண்டி வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 4077

### விற்பனைக்கு
நல்ல பழக்க வழக்கமுள்ள வளர்ந்த அல்சேஷன் ஆண் பெண் நாய்கள் விற்பனைக்குண்டு இனவிருத்திக்காக சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்களும் எம்மிடம் உண்டு. க. நடேசன் 15, மரி மகள் வீதி, அரியாலை. 4058

3 ஹோஸ் பவர் டீசல் யந்திரத்தினால் இயங்கும் 1 1/2 K. W. A. C. / D. C. டைனமோவிற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: R. K. செல்லத்துரை, பலகாடு, சாவகச்சேரி. 4111

பிரம்படி வீதி, அம்பகர் வீதி சந்தியிலுள்ள விசாலமான வீடும் நல்லீர் கிணறும் ரயோசனங்களும் அடங்கிய பதினாறுபரப்புக் காணி முழுதாகவோ துண்டுகளாகவோ சகாயமாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சிவசுப்பிரமணியம் ஓய்வுபெற்ற ஆசிரியர். தலையாளி கொக்குவில். 4201

### சோதிடம்
உங்களுடைய எதிர்காலக் கல்வி, காதல், கல்யாணம், தொழில் பற்றிய செய்திகளைத் திகதிகளுடன் பெறுவதற்குக் காலையில் வாருங்கள். சுகவேரை பார்க்க 5/- சாதகம் பார்க்க 7/50 வ. மாணிக்கம், கா ளி கோவி லடி இருநெல்வேலி, யாழ்ப்பாணம். 4106

நட்சத்திரம், வயது, பூவின் பெயர், குறித்து, 15 சத முத்திரையுடன் உறையனுப்பிப் பதில் பெறவும், இலவச மனோதத்துவ ஆருடம், ஞானபண்டித வைத்திய சாலை, அதிபர் ந. சண்முகராஜா, ஜே. பி, கொக்குவில். 4084

## சாந்தி
(சுன்னாகம்)
இரவு 6-15, 9-30
ஞாயிறு 2-30 மெற்றினி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
**தேடி வந்த மாப்பிள்ளை**



### காணவில்லை
துன்னாலை தெற்கைச் சேர்ந்த மு. சிவநாதரை (ஓய்வுபெற்ற தொலைபேசிப் பகுதி ஊழியர்) 23-1-72 ல் இருந்து காணவில்லை. 5' உயரம், சுருள் மயிர், கறுப்பு நிறம், வலது கண்ணில் வடு. இவரைத் தெரிந்தோர் தயவு செய்து சிவானந்தராசா, நவிண்டில் பாடசாலை, கைதடி என்ற விலாசத்திற்கு உடன் தொடர்பு கொள்ளவும். 4102

## கேள்வி விளம்பரம்
1972-ம் ஆண்டு பங்குனி மாதம் 16ம் திகதி (16-3-72) காலை 9-00 மணி வரை எள்ளுப்பிட்டி றேட்டு அரசினர் தன்னொலட வேலைக்கு மாற்றை மேற்கும் கிராமச்சபை அக்கிராசனரால் சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரத்தின் பிரதிகொண்டு மன்னார் பகுதி நிறைவேற்றுப்பொறியியலாளருக்கு அதே திகதியிலும் அதே நேரத்திலும் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

உத்தியோகபூர்வமான கேள்விப் பத்திரத்தின் கிரயம் 10/- ரூபாவும் கேள்விப் பத்திரப் பிணைப்பணம் ரூபா 50/-ம் கட்டி ஒப்பந்தக்காரர்கள் 15-3-72-ம் திகதி பி. ப. 3-00 மணி வரை கிராமச் சபைக் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்களை நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை கிராமச் சபைக் காரியாலயத்திலும், மன்னார் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

பி. பருணந்து
அக்கிராசனர்.
மா. மே கி. சபை
கிராமச்சபை அலுவலகம்,
மாந்தை மேற்கு,
திருக்கேதீச்சரம்,
25-2-72 4011

## வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
**மூன்றெழுத்து**

## வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஆனந்தன்
லீலா நாராயணன்
ஜெயகாந்த் - தேவிகா
நடித்த
**குத்து விளக்கு**



### தேவை
ஆயர்பாடி இராசிப் பலன் 1972 சித்திரை தொடக்கம் 1973 பங்குனி வரைக்கும். விபரமான பலன்கள் ரூபா 1-50. விற்பனைக்கு ஏஜண்டுகள் தேவை. ஆயர்பாடி சோதிட நிலையம், தெல்லிப்பழை. வே. க. மயில்வாகன சோதிடர். 4103

### தேவை
அனுபவமுள்ள (அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியவர் விரும்பத்தக்கது) எழுதுவினைஞர் ஒருவர் முடிவுபெறுமவிருக்கும் வேலைக்கான நாளாந்த சம்பள விகிதத்தில் பூர்த்தியாக்குவது சம்பந்தமாக பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபன தொழிற்சாலைக் காரியாலயத்திற்கு 1972-03-08ந் திகதிக்கு முன்பதாக நேரில் வருமாறு வேண்டுகொள்ளப்படுகிறார்.

இது சம்பந்தமான போக்குவரத்துச் செலவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

கே. ஸ்ரீசாந்தன்
கணக்காளர் (தொழிற்சாலை)
பரந்தன் இரசாயனப் பொருட்கள்
கூட்டுத்தாபனம்
1972-02-24. 4007

## கிராமசபை, புங்குடுதீவு
## கேள்வி விளம்பரம்
இறைச்சிக்கடை இல. 1
இறைச்சிக்கடை இல. 2

புங்குடுதீவு கிராமசபைத் தலைவர் அவர்களால் மேற்படி ஆட்டிறைச்சிக் கடைகள் நடாத்துவதற்கான கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

இதற்கான கேள்விப் பத்திரங்களையும் நிபந்தனைகளையும் ரூபா 12-50 (ரூ. பன்னிரெண்டு சதம் ஐம்பது) செலுத்தி 13-3-72 பி. ப. 2-30 வரையும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். செலுத்திய தொகையில் ரூ. 2-50 திருப்பித் தரப்படமாட்டாது.

சீல்வைத்த கேள்விப்பத்திரங்கள், தலைவர் கிராம சபை, புங்குடுதீவு எனும் விலாசத்திற்கு 15-3-72 காலை 9-30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

மேலும் விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்,

கா. மதியாபரணம் ஜே. பி
தலைவர், கிராமசபை
25-2-72 புங்குடுதீவு.
4010

## நாகலிங்கம் சினிமா
இன்றுமுதல்
தினசரி 4-30 மட்டும்
சனி ஞாயிறு 10-30
THE BIG MOUTH

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
**வீராங்கனை**

**போயா தினத்தையொட்டி இன்று சினிமாக் காட்சிகள் இல்லை**

# 'இந்திய வம்சாவளியினர் பிரச்னையை நீடிக்காதீர்'

## இலங்கை. இந்தியா அரசாங்கங்களை தொண்டமான் கேட்கிறார்

நுவரேலியா, ஞாயிறு

"இந்நாட்டின் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்னைகளை நீடித்துக் கொண்டு இருதேச அரசாங்கங்களும் காலங்கடத்த வேண்டாம். தீர்க்கமாக முடிவெடுக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்திய குடியுரிமைக்கு மனுச் செய்தவர்களை எவ்வளவு சீக்கிரம் ஏற்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்".

இவ்வாறு நுவரேலியில் நடைபெற்ற இ. தொ. கா. வின் 24-வது வருடாந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. தொண்டமான் வலியுறுத்தினார். திரு. தொண்டமான் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இலங்கைக் குடியுரிமைக்கு மனுச் செய்துள்ளவர்களின் நலன்களை அவர்களது பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களிடமும், இலங்கை அரசினதும் பொறுப்பில் விட்டு விடுவதுடன் இந்தியக் குடியுரிமைக்கு மனுச்செய்தவர்களை இந்தியா விரைவில் ஏற்றுக்கொண்டு இப்பிரச்னையில் இருந்து நீங்கிவிடவேண்டும். இங்குள்ள தொழிலாளரின் மாதச் சம்பளக் கோரிக்கை விஷயத்தில் அரசாங்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. தோட்டக் குழந்தைகளின் கல்வி சீர்திருந்துவதற்கு இப்பகுதிப் பாடசாலைகளுக்கும் ஏனைய பாடசாலைகளுக்கும் இடையில் வித்தியாசம் உண்டாகாதவாறு செய்தல்வேண்டும். ஆண்-பெண் தொழிலாளருக்கும் சம சம்பளம் வழங்கப்படுவது இன்றியமையாதது. இத்திட்டம் உருவாக அரசாங்கம் ஆதரவு அளிக்கவேண்டும். இது பற்றி இ. தொ. கா. வுக்கும் தோட்டத்துரைமார் சம்மேளனத்திற்கும் இடையே நடைபெறும் வாக்குவாதத்தை அரசாங்கம் பார்த்துக்கொண்டிருப்பது ஆபத்தானது.

கல்வியைப் பொறுத்தமட்டில் சில பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றால் மட்டும் போதாது. இது பற்றி ஒரு புதிய திட்டம் வகுக்கப்பட்டால்தான் இப்பிரச்னைக்கு முடிவுகாண முடியும். நாடற்றவர் எனக் கருதப்படும் நமக்குத் தோட்டங்களைத் தவிர வேறெங்கும் வேலைவாய்ப்பு இல்லை. அரசாங்கப் பயிற்சித் திட்டங்கள் அவர்களுக்கு இடைப்பதில்லை. சிறு சிறு வியாபாரங்களில் ஈடுபடவோ, வர்த்தகத்தில் ஈடுபடவோ தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் கிராம விவசாயத்திட்டங்களிலும் இடமில்லை. வெளிநாட்டுப் பயிற்சிப் பயணங்களை மேற்கொள்ளவும் முடியாது. நமக்கென ஓர் நிலையான வாசஸ்தானமும் உரிமை இல்லை. இதுதான் இன்றைய நாடற்றவரின் நிலை.

தற்போது பதவிக்கு வந்துள்ள அரசாங்கம் இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தின் 24(1) வது சரத்தை அமுலாக்க முயன்றுள்ளது. ஆனால் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா இருந்திருந்தால் விரும்பத்தகாத இச்சரத்தை நீக்கி இருப்பார் என்றார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள்

2—2—72

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

296 மீ அலை 59 மீ

6-15 நாதாஞ்சலி- மங்கள வாத்தியம் 6-20 சைவ நற்சிந்தனை - முருகாணப்பிரகாசம் 6-25 இதில் தல நற்சிந்தனை சி. எஸ். தேவபாலசிங்கம், 6-40 அறிவிப்புகள், 6-50 இசைச்சித்திரம் 7-00 பௌத்த நற்சிந்தனை- சங். ஹிசெல்ல தம்மரத்தின தேரோ, 7-05 துதிப்பாடல், 7-30 மாகாணச்செய்திகள், 7-35 குரலிசை, 8-00 பௌத்த சமயப் பேச்சு- சங். தம்மதசி தேரோ, 8-15 இஸ்லாமியகீதம், 8-30 நாகஸ்வரம் எம். பி. பாலகிருஷ்ணன், 9-30 பாட்டு- ராதா கிருஷ்ணசாமி, ஜெயலக்ஷ்மி சத்தியவாகீஸ்வரன், 10-00 உரைச்சித்திரம்- இரா சிவலிங்கம், 10-35 மெல்லிசை வாத்தியக்கோஷ்டி- இசையமைப்பு: ரி. கே. இராமமூர்த்தி, 10-00 பாட்டுக்கள். பரம் தில்லைராஜா.

இரவு 6-10 அறிவிப்புகள், 6-15 தமிழோடிசை பாடல் நடத்துபவர்: ஏ. கே. கருணாகரன். 6-30 பாட்டு: ஆர். சோமசுந்தரம், 7-00 வாழ்க்கை வாழ்வதற்கே- தொடர் நாடகம்: சி. சண்முகம் எழுதுவது. 7-15 நாட்டுப்பாடல் சித்திரம்: யாழ்ப்பாண ஒலிப்பதிவு. 7-30 உலகச் செய்திகள் 7-35 மெல்லிசைப் பாடல்கள்- பாடுபவர்: எம். எஸ். முகம்மது, பாடல்கள் யாத்தவர் ஈழத்துரத்தினம், 7-45 கண்டதும் கேட்டதும்: சமூக கலாச்சார செய்திகளின் தொகுப்புரை- இரா. பத்மநாதன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 செய்தியின் பின்னணியில், 9-15 அறிவிப்புக்கள். 9-30 தேர்த் திருவிழா வர்ணனை: மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து தேர்த்திருவிழாவின் நேர்முக வர்ணனை அஞ்சல்

## இசைக்கலைமன்ற இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

தென்மராட்சி இசைக்கலை மன்றத்தாரால் சந்திரசேகர வாசிகநாத சிவன் சேவையின் 17-வது ஆண்டு இசைவிழா தொடர்ந்து நடைபெற்றுவருகிறது 4-ம் நாளாகிய இன்று நடைபெற விருக்கும் நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:

கவுணியச் [illegible] வட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவஞானம் தலைமையில், செல்வி. இந்திரா கணபதிப்பிள்ளை, செல்வி ஜகதாம்பிகை பரமநாதன், திரு. பொன். சுந்தரலிங்கம் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும், செல்விகள் செ. தனாயினி ச. கமலாட்சி த. கௌரி ஆகியோரின் வயலினிசையும், இராமநாதன் இசைக்கல்லூரி மத்திய பிரிவு மாணவர்களின் நாதஸ்வரக் கச்சேரியும் கண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் "தமிழோடிசைப் பாடல்" என்ற பொருள் பற்றிய சொற்பொழிவும் இடம் பெறும்.

## சமாதான

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படைப்பலம் பிரயோகிக்காமல் இருப்பது போன்றவற்றிலும் இருநாடுகளும் கூட்டறிக்கையில் ஒற்றுமையான கருத்துக்களைத் தெரிவித்துள்ளன.

இருநாடுகளுக்குமிடையிலான கருத்து வேறுபாடுகள் தனித்தனியாகக் கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தைவான் சீனாவின் ஒரு பகுதி என்பதை அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது.

தைவானிலிருந்து துருப்புகளையும், ராணுவத்தளத்தையும் படிப்படியாக குறைப்பதென்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தகத் தொடர்புகளை அதிகரித்துக் கொள்வதென்றும் கூட்டறிக்கை தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி திரு' றிச்சார்ட் நிக்சனும், அவரது துணைவியாரும் 8 நாள் சீன விஜயத்தை முடித்துக்கொண்டு நாளை தாயகம் திரும்புகிறார்கள்.

## 2 வருட சிறைத் தண்டனை

மாவிட்டபுரம், ஞாயிறு

தொண்டமானாறு சன்னதி கோவிலில் தாலிக்கொடி அறுத்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிக்கு 2 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் படுத்திருந்த ஒரு பெண்ணின் கழுத்தில் இருந்த தாலிக்கொடி ஒன்றைத் திருடியதாகக் குற்றம் சாட்டி கட்டுவனைச் சேர்ந்த இன்னையா பூதப்பிள்ளை என்பவர் மீது வல்வெட்டித்துறைப் பொலிசார் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

பருத்தித்துறை நீதிபதி முன் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதால் எதிரிக்கு 2 வருடச் சிறைத்தண்டனையும் 2 வருடம் நன்நடத்தைப் பிணையும் வழங்கப்பட்டது.

## ஸ்ரீ.ல.சு.கமிட்டி கூடும்

கோட்டை, ஞாயிறு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் மார்ச்மாதம் 8ந் திகதி கூடவிருப்பதாகவும் நாட்டின் அரசியல் நிலைமை சம்பந்தமான முக்கிய விஷயங்கள் இதில் ஆராயப்படுமென்று கட்சி முக்கியஸ்தர் ஒருவர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்

பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் ஸ்ரீ ல சு கட்சியின் சகல அங்கத்தவர்களும் சமூகமளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே ஆர் ஜயவர்த்தனவை அரசாங்கக் கட்சியுடன் சேர்த்துக்கொள்வது, காலஞ்சென்ற எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்காவின் கொலை சம்பந்தமாக நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா வெளியிட்ட கருத்துக்கள் பற்றியும் ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## "ஜெர்மன் குடியரசின் உதவியை இலங்கை மக்கள் மறவார்"

வாழைச்சேனை, ஞாயிறு

"ஜெர்மன் குடியரசு இலங்கை மக்களுக்குப் பெரும் உதவியளித்துள்ளது. ஜெர்மன் குடியரசு இலங்கைக்கு பதின்மூன்றரைக் கோடி ரூபா கடனுதவியளித்துள்ளது. இந்த நன்றியை இலங்கை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்."

இவ்வாறு நீர்ப்பாசன, மின்சார, நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா, கடந்த வாரம் வாழைச்சேனையில் உள்ள கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு. ரீ. பி. சுபசிங்கா பேசுகையில் "இப்புதிய ஆலை இலங்கையின் கைத்தொழில் முன்னேற்றத்துக்கு முதற் படியாக அமைந்துள்ளது" என்று தெரிவித்தார்.

இக்கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. சி. தங்கராசா பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவிடமிருந்து வந்த பாராட்டுச் செய்தியை வாசித்துக் காட்டியதுடன் இவ்வாலையின் திட்டங்களையும் விவரித்தார்

திறப்புவிழாவுக்கு ஜெர்மன் குடியரசுத் தூதுவர் திரு. எவ். ஜே ஹொப்மன் உட்படப் பல பிரமுகர்கள் சமூகமளித்திருந்தனர்.

## "சணல் உற்பத்தி மூலம் அதிக பயன் பெறலாம்"

சங்கானை, ஞாயிறு

மிளகாய் உருளைக்கிழங்கு வெங்காயம் போன்று அதிக வருவாய் தரும் பயிர்களை அக்கறையுடன் நம்மவர்கள் விளைவிப்பதால் அவைகளின் தட்டுப்பாடு ஓர் அளவில் நீங்கி தன்னிறைவும் பெற்றுள்ளோம். இதனால் அந்நியச் செலாவணியாக பிறநாடுகளுக்கு வருடாவருடம் கொடுத்துவந்த பெருவாரியான பணமும் மிச்சப்படுத்த ஏதுவாக அமைந்துள்ளது.

இவ்வாறு யாழ் மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகஸ்தர் திரு பொ. மாணிக்கவாசகர் சண்டிலிப்பாய் தொட்டிலடி பலநோக்குக் கூட்டுறவு இணைச்சங்க மண்டபத்தில் வலிகாமம் மேற்குப் பகுதி கமக்காரர் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது: உருளைக்கிழங்குச் செய்கை முதல் முதல் ஆரம்பிக்கப்பட்ட போது இப்பகுதிக் கமக்காரர்கள் சிறிய அளவிலேயே பயிரிட்டனர். ஆனால் நாளடைவில் அதில் பெற்ற ஆதாயத்தின் பயனாக இன்று இச்செய்கை விசாலித்து பெருமளவில் விளைவித்து நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதாக உள்ளது.

தொடர்ந்து எல்லோரும் ஒரேவிதப் பயிரை உண்டு பண்ணுவதால் அதிகலாபத்தை எதிர்பார்க்க முடியாது. எனவே மாற்றுப் பயிராக சணல் உற்பத்தியை மேற்கொண்டோமானால் உற்பத்தி செய்யும் நிலைகள் அதிக பயனையும் பெறுவதுடன் சணலிலிருந்து தும்பு மற்றும் நூல்வகையும் பெற முடியும். இதனைக் குடிசைக் கைத்தொழிலாக செய்து படித்த வாலிபர்களிடத்தே நிலவிவரும் வேலை இல்லாத் திண்டாட்டத்தையும் தீர்க்க ஏதுவாகும்.

நெல் அறுவடை முடிவுற்றதும் அந்நிலங்களில் உப உணவுப் பொருட்களான பயறு உழுந்து குரக்கன் எள்ளு போன்றவற்றைப் பயிரிடுவதாலும் இத்தானியங்களைக் கட்டுப்பாடுகளைத் தவிர்க்க முடியும். மல்லி, சீரகம், வெந்தயம் கடுகு பூடு ஆகியன பயிரிடுதல் பற்றியும் விளக்கப்பட்டது.

## குடும்பத் தகராறே காரணமாம்

வவுனியா ஞாயிறு

8 வயதுப் பையன் ரவிந்திரன், மூன்றுவயதுச் சிறுவன் தவேந்திரன், தாய் நல்லம்மா (23 வயது) மூவரும் வவுனியாவில் ரயிலின் முன்பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட செய்தி வாசகர்கள் அறிந்ததே.

கணவன்மனைவிக்கிடையே ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக கணவனை விட்டு தாய் வீட்டில் வாழ்க்கை நடத்திவந்தாராம். இவ்விரு குழந்தைகளின் தாய் வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி காரணமாக தற்கொலைசெய்துகொள்ள துணிந்த இவர் தாயாரிடம் பிள்ளைகளுக்கு முடிவெட்டிக்கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டு வவுனியா வந்தார்.

குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு றெயில் தண்டவாளம் வழியாகச் சென்றாராம். றெயில்வரும்பொழுது குழந்தைகள் விலக முயன்றும் தாய் விருப்புடன் இழுத்து றெயில்முன் பாய்ந்தாராம்.

மேற்காட்டிய தகவல்கள் யாவும் இம்மரணம் சம்பந்தமாக விசாரணை நடாத்திய வவுனியா பதில் நீதவான் ஜனாப் ஏ. எம். எம். அலாவுதீன் முன்னிலையில் வெளியாயின. இவ்விபத்து சம்பந்தமாக உத்தர தேவி சாரதி திரு எம். பி டி சில்வா சாட்சியமளித்தார். தற்கொலைச் சம்பவம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பொலிசாரால்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மராட்சிப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையமொன்றில் நடந்த இச்சம்பவம்பற்றி வழக்கறிஞர் சங்கம் வருத்தந் தெரிவித்துள்ளதுடன் இதுபற்றி நடவடிக்கை எடுக்கவும் இருப்பதாக அறியப்படுகிறது. நீதிமன்ற மூலம் நடவடிக்கையெடுக்கும் வகையில் திணைக்கள ரீதியாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட விருப்பதாக மேற்படி சங்க முக்கியஸ்தர் ஒருவர் கூறினார்.

## பஸ்ஸை மறித்துக் கொள்ளை

மாத்தளை, ஞாயிறு

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றை தம்புள்ளையிலிருந்து 9 மைல் தூரமுள்ள டிகம்பத்தன என்ற இடத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கூட்டத்தினர் மறித்து வழிப்பறி செய்தனர்.

பஸ் கண்டக்டரிடமிருந்த 300 ரூபாவை கொள்ளையடித்த இக் கூட்டத்தினர் தூரத்தில் வந்துகொண்டிருந்த "ஜீப்"பைக் கண்டதும் தலைமறைவாகினர். இதே கூட்டத்தினர் சில வாரங்களுக்கு முன்னர் இதே இடத்தில், ஒரு வியாபாரி வானையும் கொள்ளையடித்ததாகத் தெரியவருகிறது. டம்புல பொலிஸார் இந்த இடத்திலுள்ள காடுகளை துப்புரவு செய்து வருகின்றனர்.

## மணிவாசகம்

நீங்கள் சிரிக்கும் போது உங்களுடன் உலகமெல்லாம் சேர்ந்து சிரிக்கிறது. அழும்போது நீங்கள் மட்டும்தான் அழநேரிடும். ஆகவே எப்போதும் சிரியுங்கள் அழாதீர்கள்.

—சுவாமி ராமதாஸ்.

# ஈழநாடு

Ceylon's National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna.
Post Box 49 Jaffna Telephone: 389

... மாசி மாதம் 16-ந் திகதி (28-2-72)


## நாடற்றவர் பிரச்னை

இலங்கையிலே நாடற்றவரின் பிரச்னை தீர்வதற்கோ அல்லது குறைவதற்கோ பதில் எப்படி அதிகரித்துவருகிறதென்பதையும், அதைத் தீர்க்கத் தீவிர முயற்சிகள் எடுக்கவேண்டிய அவசியத்தையும் நுவரேலியாவில் கூடிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 24-வது மகாநாட்டில் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் தமது ஜேலான பிரசங்கத்தில் விளக்கியுள்ளதுடன், மனிதாபிமானத்துடன் அதைத் தீர்க்காவிடில் நாட்டுக்கு எவ்வளவு ஆபத்தென்பதையும் சரியாக எச்சரித்திருக்கின்றார். அரசியல் ஞானமும், தேசாபிமானமும், மனிதாபிமானமும் மேலியும் அவரது பிரசங்கத்தைச் சிறப்பாக இந்நாட்டின் நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்களும் இந்திய அரசாங்கமும் கூர்ந்து கவனிக்கும். இந்த மனிதப் பிரச்னையைத் தீர்க்கப் புதிய முயற்சிகளை உடனடியாகச் செய்யவேண்டிய அவசியத்தை உணர்வர்.

நாடற்றவரின் இன்னல்களையும் அவர்கள் எவ்விதம் கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் இலங்கையிலேயே பிறந்த அம்மக்கள் எவ்விதம் மனமுடைந்த நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் திரு. தொண்டமான் விளக்கி, இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் சில முக்கிய யோசனைகளைக் கூறியுள்ளார். இந்தியப் பிரஜா உரிமைக்கு மனுச்செய்துள்ள நாடற்றவர்களைத் தவக்கமின்றி இந்தியா அரசாங்கம் திருப்பி அழைத்துக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுள்ளார். இவ்விஷயத்தில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்கமுடியாது. இவ்விஷயத்தில் தாமதம் ஏற்படின், அது சம்பந்தப்பட்ட மக்களின் சங்கடங்களை அதிகரிப்பதுடன், இலங்கை-இந்தியா பிரச்னையும் மேலும் சிக்கலாகி வீணாக நீடிப்பதாக இருக்கும். இந்திய அரசாங்கம் அவ்விதமே தன் கடமையை வீண் தாமதமில்லாதபடி செய்யுமென்றே நம்பப்படுகிறது. தாய்நாடு திரும்புபவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளிக்க இந்தியா ஆவன செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்தப் பிரச்னையைக் கைகழுவிவிட்டு இந்திய அரசாங்கம் ஒதுங்கிவிடவேண்டுமென்று கேட்கிறார் திரு. தொண்டமான். தாய்நாடு திரும்புபவர்களின் எண்ணிக்கையை வைத்தே ஏழு பேருக்கு நால்வர் என்ற விகிதத்தில் பிரஜா உரிமை அளிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதால் எவ்வளவு விரைவில் இந்தியப் பிரஜைகளை இந்தியா ஏற்றுக்கொள்ளுகின்றதோ அவ்வளவும், இலங்கைப் பிரஜா உரிமைக்கு மனுச் செய்துள்ள 'நாடற்றவர்கள்' அவ்வுரிமையைப் பெற உதவியாக இருக்கும். இவ்விஷயமாக இலங்கை அரசாங்கமும் விசேஷ ஏற்பாடுகளைச் செய்துள்ளது. பலர் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டுவருவதும் நாடற்றவர் பிரச்னையைப் பெருமளவில் தீர்க்கமுடிவதாக இருக்கும்.

ஆனால் இலங்கைப் பிரஜா உரிமைக்கு மனுச் செய்தும், அது கிடைக்காமல் இருப்பவர்களின் நிலைமை என்ன? ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் அவ்விதம் இருப்பரென்று இரு அரசாங்கங்களும் சேர்ந்து மதிக்கின்றன. ஆனால் அவரவர் அவர்கள் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்றும் 15 வருடகாலத்தில் 6 லட்சத்துக்கு அதிகமானவர்கள் நாடற்றவர்களாகப் பெருகிவிடுவரென்றும் சரியாக எச்சரிக்கின்றார் அவர். இவர்களது பிரச்னையை இலங்கை அரசாங்கமும், அம்மக்களுக்காகவுள்ள இலங்கைப் பிரதிநிதி ஸ்தாபனங்களும் பேசித் தீர்த்துக்கொள்ளுமென்றும் அதை அவர்களுக்கே விட்டுவிடுமாறும் அவர் கேட்டுள்ளது மிகவும் சரி. இலங்கைப் பிரஜா உரிமைக்கு மனுச்செய்துள்ளவர்களின் பிரச்னை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னையாதலின், அதில் இந்தியா தலையிடத் தேவையில்லை. இந்நாட்டு அரசாங்கமும், சம்பந்தப்பட்டவர்களும் கலந்து பேசி இதை நல்லபடி தீர்த்துக்கொள்ளலாம். இவர்களது பிரஜா உரிமைப் பிரச்னை சீக்கிரத்தில் தீர்ப்பது, அவர்களுக்குமட்டுமன்றி நாட்டுக்கும் பல விதங்களிலும் நன்மையாகும்.

# தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் நாட்டுக் கூத்துப்போட்டி விழா

## மேயர் கூட்டிய மகாநாடு தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள் மறைந்துவரும் நாட்டுக்கூத்து, விலாசநாடகம் போன்ற பழைய கலைகளுக்குப் புத்துயிரளிக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் யாழ்நகரமேயர் திரு அல்பிரட் தங்கராசா துரையப்பாவைத் தலைவராகக் கொண்டு "யாழ் தேசிய நாடக - நாட்டுக்கூத்து மன்றம்" என்ற பெயரில் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மன்றத்தின் முதல் நடவடிக்கையாக இலங்கை படமெங்கிலுமுள்ள நாடக மன்றங்கள், தனிப்பட்ட நாடகத் தயாரிப்பாளர்கள் ஆகியவர்கள் தயாரித்தளிக்கும் நாட்டுக் கூத்துப் போட்டி விழாவொன்று தமிழ்ப்புத்தாண்டான ஏப்ரல் 12-ந் தேதியும் 13-ந் தேதியும் யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கிறது.

நாட்டுக்கூத்துப் போட்டியில் கலந்துகொள்வோர் பத்து ரூபாய் முற்பணம் செலுத்தி அதற்குரிய விண்ணப்பப்பத்திரத்தைப் பெற்று மார்ச் மாதம் 15-ந் தேதிக்குள் விண்ணப்பஞ் செய்யவேண்டுமென்றும் இப்போட்டியில் பங்குபற்றும் நாடகங்களை அவற்றின் தயாரிப்பாளர்கள் முதலில் தங்கள் செலவில் நகரமண்டபத்தில் மத்தியஸ்தர் குழுவின் முன் நடித்துக் காட்டவேண்டுமென்றும் இதில் இறுதியாகத் தெரிவு செய்யப்படும் நான்கு நாட்டுக்கூத்துகளும் இறுதிப் போட்டிவிழாவில் இடம்பெறுமென்றும் முதல் மூன்று இடங்களைப் பெறும் நாடகங்களுக்கும் முதல், இரண்டு, மூன்று எனப் பரிசுகள் வழங்கப்படுவதுடன் நான்காவதாகவரும் நாடகத்துக்கு ஆறுதற்பரிசு வழங்கப்படும் என்றும் மேயர் கூட்டிய நாட்டுக்கூத்துமன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இக்கூட்டத்தில் மன்ற நிர்வாகிகளும் நாட்டுக்கூத்துப் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கென உபகுழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

# குடியரசு பிரகடனத்துக்கு மே 27 பொருத்தமானதேதி?

## பின் ஆசன எம். பி.க்கள் வலியுறுத்து

கொழும்பு, ஞாயிறு புதிய குடியரசு பிரகடனத்திற்கு மே மாதம் 27-ம் தேதியே பொருத்தமான தேதியென அரசாங்க வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஐக்கிய முன்னணியினரின் அமோக தேர்தல் வெற்றியின் இரண்டாவது வருடாந்த தினம் இதுவாகும்.

பின் ஆசன எம். பிக்களில் அநேகர், இத்தேதியை ஐக்கிய முன்னணியின் தலைமைப்பீடத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

ஏற்கனவே 157 வருடங்களுக்கு முன்னர் இலங்கை பிரிட்டிஷாரின் சுவாதீனமான தேதியான மார்ச் 2-ல் புதிய குடியரசு பிரகடனம் செய்யப்படும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அரசியல் நிர்ணயசபை வேலைகள் பூர்த்தியாக இன்னும் 6 வாரங்கள் செல்லும் போல் தோன்றுகிறது.

நகல் அரசியல் அமைப்புத் திட்டத்தை பகுதி பகுதியாக ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட 11 பேர் கொண்ட குழு, தற்போது தான் அதன் வேலையை ஆரம்பித்துள்ளது. வழிநடத்தும் குழு இதனை நன்கு பரிசீலனை செய்த கமிட்டியின் சிபாரிசின்படி, நகல் திட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவந்து அதன் பின் புதிய நகல் திட்டத்தை அரசியல் நிர்ணயசபையில் சமர்ப்பிக்கும். இந்த முடிவு எடுக்குமுன்னர் அரசியல் நிர்ணயசபையே இதுபற்றி விவாதிக்கவேண்டும்.

மேற் குறிப்பிட்ட வேலைகள் எல்லாம் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் பூர்த்தியாகுமென அரசியல் விவகார அமைச்சு உத்தியோகத்தர் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. புதுவருட தினத்தன்று குடியரசு பிரகடனம் செய்யப்படுமென்ற உத்தேசம் ஒன்றும் இருக்கிறது. ஆனால் இத்தேதி அரசியல் வட்டாரங்களில் சாதகமாகக் கருதப்படவில்லை.

......

### கதாகாலட்சேஷபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலில் ஆயர்பாடி சோதிடர் ஆழ்வார் வே. த. மயில்வாகனம் இன்றுமாலை "[illegible] விமோக்ஷம், இராவணவதம், ஸ்ரீசீதாராம பட்டாபிஷேகம் என்னும்பொருள்பற்றி கதாகாலட்சேஷபம்செய்வார்.

......

### கௌரவிக்கப்படுவார்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் பெரியகடை சித்திவிநாயகராலயத்தில் சென்ற இருபத்தைந்து திருவிழாக்களிலும் மகாபாரத விரிவுரை நிகழ்த்தியமைக்காக இன்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் கௌரவிக்கப்படவிருக்கிறார்.

0 0 0

### கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், திங்கள் நாளை யாழ்ப்பாணம் பெரியகடை சித்திவிநாயகர் ஆலயத்தில் மாலை 6-00 மணி முதல் இரவு 7-30 வரை அருட்கவி விநாசித்தம்பி "கந்தப்பனும் கச்சியப்பனும்" என்னும் பொருள் பற்றிக் கதாப்பிரசங்கம் செய்வார்.

## அருட்கவி விநாசித்தம்பிக்கு 'சைவமணி' பட்டம்

யாழ்ப்பாணம், திங்கள் அளவெட்டி அருட்கவி சீ. விநாசித்தம்பிக்கு "சைவமணி" என்ற பட்டத்தை ஜகத்குரு பார்வதீஸ்வரர் ஸ்ரீசிவானந்த முனீஸ்வரர் வழங்கியுள்ளார்.

அருட்கவி சீ. விநாசித்தம்பி இலங்கையில் பிரபலம் பெற்றுவிளங்கும் சைவப்பிரசாரகராவார். கதாகாலட்சேபம் செய்வதில் சைவ அடியவர்களிடத்தில் செல்வாக்கு பெற்றுள்ள இவர் கதாப்பிரசங்கம் செய்யும்போது சமயமாகவே சந்தர்ப்பத்துக்கும் இடத்துக்கும், பொருளுக்கும் அமைய உடனே பாடல்களை இயற்றி இசைஞானத்துடன் பாடும் திறமை பெற்றவர். எந்த தேவஸ்தானத்திலும் பிரசங்கத்தை ஆரம்பிக்கும் போது அந்த தேவஸ்தான மூர்த்தியை உடன் அமைக்கும் கவிதைமூலம் வணங்குவது இவர் கடமையாகவுள்ளது.

கும்பிழான் பிள்ளையார் கோவிலில் ஆயிரக்கணக்கான அடியவர்களுக்கு மத்தியில் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள ஜகத்குரு பார்வதீஸ்வரர் ஸ்ரீசிவானந்தர் இப்பட்டத்தை வழங்கியுள்ளார்.

### வடக்கில்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உதவிகளைக் கொடுக்கின்றன.

யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா பேசுகையில், இப்பகுதிகளில் சாதாரண மக்கள் படும் கஷ்டங்கள் பல இந்த வங்கிக் கிளையினால் தீர்ந்துவிடும் என்றார்.

கூடுதலான வட்டிக்கு அடகுவைத்துத் தம்மை மேலும் வறியவர்களாக மாற்றிக்கொள்ளும் ஏழை மக்களுக்கு இந்த வங்கி நல்ல உதவியாக இருக்கும் என்று மேயர் மேலும் கூறினார்.

கூட்டுறவுச் சிரேஷ்ட ஆணையாளர் திரு. வி. பொன்னுத்துரை, மாநகரசபை உறுப்பினர் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் ஆகியோரும் உரையாற்றினர். (குரு.நிரு)

### சிரமதானம்

வவுனியா, ஞாயிறு வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் சிரமதான வேலைத்திட்டமொன்று நடைபெற்றது.

வித்தியாலய மாணவ மாணவிகள் ஆசிரிய, ஆசிரியைகள் பெற்றோர் உட்பட வித்தியாலயத்தின் நலனில் அக்கறை கொண்டோரும் இச் சிரமதானத்தில் கலந்துகொண்டனர்.

### இளைஞன் தற்கொலை

வவுனியா, ஞாயிறு வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த பதினெட்டு வயதுடைய ஆர். பரமேஸ்வரன் நச்சுத்திரவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இங்குள்ள பாடசாலையில் படித்துவந்த இளைஞனின் படிப்புநிலை குன்றியிருந்தமையால் சகோதரன் கண்டித்ததாகவும் இதனால் பொறுக்கமாட்டாத இளைஞன் நச்சுத்திரவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டாரென்றும் விசாரணையில் தெரியவந்தது.

வவுனியா திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். வி. விக்கினராஜா விசாரணை நடாத்தி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.


### வாடகைக்கு

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் நாவலர் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடும், வளவும் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு:- T. சண்முகதாஸ், 225, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 4202


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.